








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 01.09.2018


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- வர்த்தக நிகழ்வுகள்
- விருதுகள்







## தமிழக நிகழ்வுகள்

- ஸ்டெர்லைட் ஆலையை ஆய்வு செய்வதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி எஸ்.ஜே. வசீப்தர் தலைமையில் மத்திய மாசுக் கட்டுப்பாட்ட வாரியத்தைச் சேர்ந்த உறுப்பினர், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் ஆகியோரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது.
    - ஆனால், ஆய்வுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட **'வசீப்தர்'** பதவியை ஏற்க மறுத்ததை அடுத்து ஸ்டெர்லைட் ஆலையை ஆய்வு செய்யும் குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற தலைமை **நீதிபதி 'தருண் அகர்வால்** நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மேகாலயாவின் முன்னாள் தலைமை நீதிபதி ஆவார்.

## இந்திய நிகழ்வுகள்

- வெளிநாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் அதிகம் வருகை தரும் மாநிலங்களின் பட்டியலில் **தமிழ்நாடு இரண்டாவது** இடத்தைப் பெற்றுள்ளது.
    - இப்பட்டியலில் **மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்திலும், உத்திரப் பிரதேச மாநிலம் 3**-வது இடத்திலும் உள்ளது.
- குறிப்பு:
    - வெளிநாட்டுப் பயணிகள் அதிகம் வருகை தரும் நாடுகளின் பட்டியலில் **வங்கதேசம்** முதலிடம் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

- ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் வருடாந்திரக் கூட்டத்தில் **"நிலையான விவசாய வேளாண்மைக்கு நிதியளித்தல் உலகளாவிய சவால்கள் மற்றும் வாய்ப்புகள;" "(Financing Sustainable Agriculture; Global Challenges and Opportunities)"** என்ற தலைப்பில் உரையாற்றுவதற்காக ஆந்திர பிரதேச மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு-வை ஐக்கிய நாடுகள் அழைத்துள்ளது.

- குடியிருப்புகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஆற்றல் சேமிப்பை ஊக்குவிக்கும் விதமாகவும், எரிசக்தி திறன் சேவைகள்

WeShine Academy™

லிமிடெட்டின் **(EESL – Energy Efficiency Services Limited)** திறனை அதிகரிக்கும் விதமாகவும் வணிக நிதிக்கான அணுகலை அதிகரிக்கவும், **இந்தியா, உலக வங்கியிடம் 220** மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

- இந்தியா மற்றும் ஆசியன் **(ASEAN)** நாடுகளுக்கிடையேயான வர்த்தக மற்றும் பொருளாதார மேம்பாடு போன்றவற்றை உள்ளடக்கிய 6வது பிராந்திய வரிவான பொருளாதார கூட்டு **(RCEP – Regional Comprehensive Economic Partnership)** என்னும் வர்த்தக மந்திரிகள் மாநாடு **(6th RCEP Trade Minister Meeting)** **சிங்கப்பூரில்** நடைபெற்றது.
    - இம்மாநாடு இந்திய வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் சுரேஷ் பாபு தலைமையில் நடைபெற்றது.

## உலக நிகழ்வுகள்

- ஆஸ்திரேலியாவில் நடைபெறும் மிகப்பெரிய கடற்பயிற்சியான **KAKADU – 2018-ன் 14வது** பதிப்பு ஆஸ்திரேலியாவின் டார்வின் துறைமுகத்தில் ஆகஸ்ட் 29-முதல் செப்டம்பர் **18** வரை நடைபெற உள்ளது.
    - **KAKADU** – 2018 – என்னும் கடற்பயிற்சியில் பல நாடுகளின் கப்பல்கள் பங்கு பெறுகின்றன. இப்பயிற்சியில் இந்தியாவின் **INS**-சஹ்யாத்ரி **(INS-Sahyadri)** பங்கு பெற உள்ளது.

- பிரேசில், ரஷியா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் (பிரிக்ஸ் நாடுகள்) இணைந்து உருவாக்கிய **NDB – New Development Bank)** எனப்படும் புதிய மேம்பாட்டு வங்கிக்கு சர்வதேச தரச்சான்று நிறுவனமான ஸ்டாண்டர்டு அண்ட் பூர் **(S & P) Standard and Poor's** நிறுவனம் இந்த வங்கிக்கு **ஏஏ பிளஸ் (AA Plus)** தரச் சான்றை வழங்கியுள்ளது.
- குறிப்பு:
    - **NDB ஆனது 2014ம்** ஆண்டு வங்கி தொடங்க திட்டமிட்டு 2015 ஜூலையில் செயல்பட ஆரம்பித்தது.
    - இதன் தலைமையகம் : **சீனா, ஷாங்காய்**
    - தலைவர் : **கே.வி. காமத்** (முதுபெரும் வங்கியாளர்)

## வர்த்தக நிகழ்வுகள்

- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2018ம் ஆண்டில் முதல் காலாண்டில் **8.2 சதவீகிதமாக** உள்ளது என மத்திய அரசு அறிவித்துள்ளது.
    - கடந்த 2017ம் ஆண்டு முதல் காலாண்டில் 5.59 சதவிகிதம் மட்டுமே ஜி.டி.பி வளர்ச்சி இருந்தது.
    - 2017ம் ஆண்டு இறுதி காலாண்டில் நாட்டின் **GDP 7.7 சதவீகிதமாக** இருந்தது குறிப்பிடத்தக்கது.

## விருதுகள்

- ஆசியாவின் நோபல் பரிசு என்றழைக்கப்படும் **இராமன் மகசேசே** என்னும் உயரிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட இரு இந்தியர்களான மும்பையைச் சேர்ந்த **'பரத் வட்வானி'** மற்றும் **ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தின் 'சோனம் வாங்சுக்'** உட்பட 6 பேருக்கு பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற விழாவில் இராமன் மகசேசே விருது' ஆகஸ்ட் 31 அன்று வழங்கப்பட்டுள்ளது.
- குறிப்பு
    - பிலிப்பைன்ஸ் நாட்டின் மறைந்த அதிபர் இராமன் மகசேசே நினைவாகவும், அரசியல் நேர்மை, மக்கள் சேவை போன்றவற்றை வளரும் நாடுகளில் பரப்பும் வகையிலும் 1957ம் ஆண்டு முதல் ராமன் மகசேசே விருது வழங்கப்படுகிறது.

WeShine Academy™